## 10-ஆம் வகுப்பு – தமிழ் - ஒரு மதிப்பெண் வினாக்கள் – பயிற்சித்தாள்-2

-----------------------------------------------------------------------------------------------------------

1. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!" எஞ்சியுள்ள பெருங்காப்பியங்கள் எத்தனை?

அ) ஐந்து ஆ) மூன்று இ) இரண்டு ஈ) எட்டு

2.துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெரியவன்கவிராயர் இ) தேவநேயப் பாவாணர் ஈ) தமிழண்ணல்

3.பெருஞ்சித்திரனார் பாடலில் 'பழமைக்குப் பழமை' என்னும் பொருள் தரும் சொல்.

அ) முன்னை முகிழ்ந்த ஆ) முன்னைக்கும் முன்னை

இ) முன்னும் நினைவால் ஈ) முந்துற்றோம் யாண்டும்

4.'பாப்பத்தே எண் தொகையே' – சரியான பொருளைக் கண்டறி.

அ) பாடல் பத்து, எண் தொகை ஆ) பா பத்து, எட்டுத் தொகை

இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) பத்தும் எட்டும்

5.பெருஞ்சித்திரனாரின் 'முந்துற்றோம் யாண்டும்', 'தமிழ்த்தாய் வாழ்த்து' என்னும் இரு தலைப்பிலுள்ள பாடல்கள் எத்தொகுப்பிலிருந்து எடுத்தாளப் பெற்றன?

அ) எண்சுவை எண்பது ஆ) உலகியல் நூறு

இ) நூறாசிரியம் ஈ) கனிச்சாறு

6.செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அது போல – பயின்று வரும் அணி

அ) உவமையணி ஆ) உருவக அணி

இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) தற்குறிப்பேற்றணி

7.செந்தமிழ் – பிரித்து எழுதுக.

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) செ + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

8.செந்தமிழ், செந்தாமரை ஆகிய சொற்களில் இடம் பெறும் இலக்கணக் குறிப்பைச் சுட்டுக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத் தொகை ஈ) அன்மொழித்தொகை

9.உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூள – இவ்வடியில் காணும் நயம்

அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு

LIVEWORKSHEETS

10.தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே

மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

- இப்பாடலில் அமைந்த **எதுகைச் சொற்களை** எடுத்தெழுதுக.

அ) தென்னன் ஆ) மன்னும் இ) இன்னறும் ஈ) இவையனைத்தும்

---



LIVEWORKSHEETS